செ.வெ.எண்: 415/2020 நாள்: 24.10.2020

**ஆரணி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட 73 பயனாளிகளுக்கு ரூ.1 கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பிலான இலவச வீட்டுமனைப் பட்டா மற்றும் பசுமை வீடுகள் திட்ட பணி ஆணை மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் நேரில் வழங்கினார்...**

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் இன்று (24.10.2020) நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் 73 பயனாளிகளுக்கு ரூ.1 கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பிலான இலவச வீட்டுமனைப் பட்டா மற்றும் முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் புதிய வீடுகள் கட்டுவதற்கான பணி ஆணை மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு. சேவூர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள் நேரில் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. க. சு. கந்தசாமி, இ.ஆ.ப., வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகிகள் மற்றும் பயனாளிகள் கலந்து கொண்டனர்.

ஆரணி வட்டத்திற்கு உட்பட்ட வெட்டியாந்தொழுவம், பூசிமலைக்குப்பம், அய்யம்பாளையம், சென்னானந்தல், கண்ணமங்கலம் மதுரா அம்மாபாளையம், 5-புத்தூர் ஆகிய கிராமங்களில் கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக வசித்து வரும் குடும்பங்களின் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில் 24 பயனாளிகளுக்கு ரூ.3.60 லட்சம் மதிப்பிலான இலவச வீட்டுமனைப் பட்டா மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது. இலவச வீட்டுமனைப் பட்டா பெற்றுக் கொண்ட பயனாளிகள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசுக்கு நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

மேலும், ஆரணி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட சேவூர், பையூர், மாமண்டூர், இரும்பேடு, காட்டேரி, கனிகிலுப்பை, புதுப்பட்டு, வடுகசாத்து, சித்தேரி, பனையூர், கல்லேரிப்பட்டு, சங்கீதவாடி, வேதாஜிபுரம், 12-புத்தூர், ஆதனூர், லாடவரம், பூசிமலைக் குப்பம், முள்ளண்டிரம் ஆகிய கிராமங்களில் வசித்து வரும் 20 பயனாளிகளுக்கு தலா ரூ.2.10 லட்சம் வீதம், மொத்தம் ரூ.42.00 லட்சம் மதிப்பில் முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் புதிய வீடுகள் கட்டுவதற்கான பணி ஆணை மாண்புமிகு அமைச்சர் அவர்களால் நேரில் வழங்கப்பட்டது.

மேற்கு ஆரணி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட காட்டுகாநல்லூர், காமக்கூர், கொளத்தூர், 5-புத்தூர், அழகுசேனை, அய்யம்பாளையம், அத்திமலைப்பட்டு, தெள்ளூர், முருகமங்கலம், தச்சூர், புங்கம்பாடி, தேவிகாபுரம், புலவன்பாடி, ஆகாரம், இராமசாணிகுப்பம், கீழ்நகர், புதுப்பாளையம், இராந்தம் ஆகிய கிராமங்களில் வசித்து வரும் 29 பயனாளிகளுக்கு தலா ரூ.2.10 லட்சம் வீதம், மொத்தம் ரூ.60.90 லட்சம் மதிப்பில் முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் புதிய வீடுகள் கட்டுவதற்கான பணி ஆணை மாண்புமிகு அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம்.